ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2114/61 - 2019 මාර්තු මස 15 වැනි සිකුරාදා - 2019.03.15

*2114/61 ஆம் இலக்கம் – 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV (அ) – மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

### மேல் மாகாண மாகாண சபை

இணைப்பு 05

மேல் மாகாண முகாமைத்துவ உதவியாளர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு

மீளமைப்பு இலக்கம் 02

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1898/5 ஆம் இலக்க, 2015.01.19 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு 2050/41 இலக்க, 2017.12.22 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் மீளமைக்கப்பட்ட மேல் மாகாண முகாமைத்துவ உதவியாளர் சேவைப் பிரமாணக் குறிப்பு பின்வருமாறு மீளமைக்கப்படுகின்றது : -

1. 7 ஆவது பந்தியின் 7.3.2.1 ஆம் பிரிவினை கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு பதிலீடு செய்தல் வேண்டும் –

   7.3.2.1 கல்வித் தகைமைகள்

   கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாத தவணைகளில் ஆகக்குறைந்தது இரண்டு திறமைச் சித்திகளுடன் சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி மற்றும் கணிதம்/எண் கணிதம்/தூய கணிதம்/அடிப்படைக் கணிதம்/வர்த்தக எண்கணிதம் உட்பட ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

2. இணைப்பு 6 இன் கீழ் இல. 02, இல. 04 மற்றும் இல. 05 ஆகிய பகுதிகளில் ‘‘பரீட்சை’’ என்பதற்குப் பதிலாக ‘‘வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை’’ எனப் பதிலீடு செய்யப்படல் வேண்டும்.

3. இணைப்பு 06 தொடர்பாக இறுதியில் இல. 06 ஆக அதில் பின்வரும் விடயங்கள் சேர்க்கப்படுகின்றன.

1A - PG 4429 — 42 (2019/03)

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

6. முகாமைத்துவ உதவியாளர் சேவையின் I ஆம் தரத்தைச் சேர்ந்த அலுவலர்கள் தொடர்பாக அரசாங்க சேவையின் சிரேஷ்ட அலுவலர் ஒருவர் அறிந்திருக்கவேண்டிய அடிப்படைக்கோட்பாடுகள் அடங்கிய 10 நாட்களைக்கொண்ட பாடநெறி **I ஆம் தரத்திற்கு பதவி உயர்த்தப்பட்ட 05 ஆண்டுகளுக்குள்** வெற்றிகரமாக பூர்த்திசெய்யப்பட்டதன் அடிப்படையில் I ஆம் தரத்தைச் சேர்ந்த அலுவலர்களுக்கு உரித்தான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடையவேண்டும் எனும் தேவைப்பாட்டிலிருந்து விடுவிக்கப்படலாம்.

(i) பாடநெறியை நடாத்துகின்ற அதிகாரி - மேல் மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழு அல்லது மேல் மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவால் அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனம்.

(ii) பாடநெறி நடாத்தப்படும் கால எல்லை - உரிய பயிற்சிப் பாடநெறிக்கு உரியதான விண்ணப்பங்கள் கோருவதற்கான அறிவித்தல் ஒவ்வொரு வருடத்தினதும் முதல் காலாண்டில் பிரசுரிக்கப்படுவதோடு, அதற்காகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் அளவினைக்கொண்டு ஒரு வருடத்திற்கு நடாத்தப்படும் தடவைகளின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.

(iii) பாடநெறியின் பாடத்திட்டம்.

| தொடர் இல. | நிரல் கூறு | காலம் |
|---|---|---|
| 01 | அரசாங்க சேவையில் ஒழுக்காற்று நடைமுறை விதிகள் | 02 நாட்கள் |
| 02 | அரசாங்க நிதி முகாமைத்துவம் மற்றும் சொத்து முகாமைத்துவம் | 03 நாட்கள் |
| 03 | அமைப்பாண்மை உற்பத்தித்திறன் | 02 நாட்கள் |
| 04 | பெறுகை செயன்முறை நடைமுறை | 02 நாட்கள் |
| 05 | தகவலறியும் சட்டம் மற்றும் வாடிக்கையாளர் பராமரிப்பு | 01 நாள் |

*குறிப்பு -*

(1) மேல் மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழு அல்லது மேல் மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவால் அங்கீகாரமளிக்கப்பட்ட நிறுவனம் மூலம் பாடநெறி நெறிப்படுத்தப்படுவதுடன், உரிய ஐந்து கூறுகளையும் சிறப்பாகப் பூர்த்திசெய்வதன் மூலம் மாத்திரம் மேல் மாகாண முகாமைத்துவ உதவியாளர் சேவையின் I ஆம் தரத்திற்கான விணைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையிலிருந்து விலக்களிக்கப்படும்.

(2) மேலும், மேல் மாகாண முகாமைத்துவ உதவியாளர் சேவையின் I ஆம் தரத்திற்கான விணைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையைப் பூர்த்திசெய்வது தொடர்பாக மேற்படி (01) பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையில் சித்தியடைதல் அல்லது (06) பகுதியின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறியின் பாடத்திட்டத்தின் கீழுள்ள 05 நிரல்கூறுகளையும் சிறப்பாக பூர்த்திசெய்தல், இவை தவிர பரீட்சையின் பாடங்கள் மற்றும் பாடநெறியின் பாடங்கள் இணைந்த பாடத்திற்கு பாடம் விலக்களிக்கப்படும் அடிப்படையில் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் இருந்து எவ்விதத்திலும் விலக்களிக்கப்படமாட்டாது.

மேல் மாகாண கௌரவ ஆளுநரின் அறிவுறுத்தலின்படி,

எம். ஜி. ஏ. திலகரத்ன,
செயலாளர்,
மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு,
மேல் மாகாணம்.

மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு,
109, பிரதான வீதி,
பத்தரமுல்ல,
2019, மாச்சு 07.

3 - 1488

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.